பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

23 08 2026 6 45

ஞாயிற்றுக்கிழமைtamil 6 காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. அகிம்சை, அமைதி ஆகியவை இந்தியாவின் தொன்மையான கலாச்சார பாரம்பரியத்தின் அடையாளமாக உள்ளது என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

2. பருத்தி உற்பத்தியில் உலகளவில் இந்தியா முன்னணி நாடாகத் திகழ்கிறது என்று மத்திய ஜவுளித்துறை அமைச்சர் திரு கிரிராஜ் சிங் தெரிவித்துள்ளார்.

3. தமிழகத்தின் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு தவெக அரசு திட்டங்களை முனைப்புடன் செயல்படுத்தி வருவதாக மாநில வருவாய்த்துறை அமைச்சர் திரு. செங்கோட்டையன் கூறியுள்ளார்.

4. மேற்குத்தொடர்ச்சி மலை மாவட்டங்கள் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் அடுத்த ஐந்து தினங்களுக்கு மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. இந்தியா - இலங்கை அணிகளுக்கு இடையேயான இரண்டாவது மற்றும் இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டி கொழும்பில் இன்று தொடங்குகிறது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

அகிம்சை, அமைதி ஆகியவை இந்தியாவின் தொன்மையான கலாச்சார பாரம்பரியத்தின் அடையாளமாக உள்ளது என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர், அகிம்சை என்பது நாட்டின் பலவீனமாக யாரும் கருதக்கூடாது என்று வலியுறுத்தியுள்ளார்.

நாட்டின் பாதுகாப்பு, இறையாண்மை, கண்ணியத்தைப் பாதுகாப்பதே மத்திய அரசின் முதன்மையான கடமை என்று அவர் குறிப்பிட்டார்.

மேலும், சமண மதம் இந்தியாவின் நாகரிகம் மற்றும் கலாச்சாரத்தின் பெருமைக்குரிய அடையாளம் என்றும், அதன் மரபுகள் மற்றும் பாரம்பரியத்தைப் பாதுகாப்பதற்கும், மேம்படுத்துவதற்கும், பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு உயர் முன்னுரிமை அளித்து வருகிறது என்றும் அவர் கூறினார்.

கடந்த சில ஆண்டுகளில், பல்வேறு காலகட்டங்களில் கடத்தப்பட்ட 20-க்கும் மேற்பட்ட புனிதமான தீர்த்தங்கரர் சிலைகள், வெளிநாடுகளிலிருந்து இந்தியாவுக்குத் திரும்பக் கொண்டுவரப்பட்டுள்ளன என்றும் திரு ராஜ்நாத் சிங் தெரிவித்தார்.

<<<<>>>>

பருத்தி உற்பத்தியில் உலகளவில் இந்தியா முன்னணி நாடாகத் திகழ்கிறது என்று மத்திய ஜவுளித்துறை அமைச்சர் திரு கிரிராஜ் சிங் தெரிவித்துள்ளார்.

மும்பையில் நடைபெற்ற ஜவுளி குழுவின் 62-வது நிறுவன நாள் நிகழ்ச்சியில் பேசிய அவர், தரமான ஜவுளிப் பொருட்களை உற்பத்தி செய்வதில் கவனம் செலுத்த வேண்டும் என்று வலியுறுத்தினார்.

பாரம்பரிய இழைகளுடன், புதிய இழைகளையும் ஒருங்கிணைக்கப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

நவி மும்பையில் உள்ள மறுசுழற்சி செய்யும் ஆலைக்குச் சென்று பார்வையிட்ட அவர், மறுசுழற்சி, மறுபயன்பாடு போன்ற நடவடிக்கைகள் வாயிலாக, ஜவுளிக் கழிவுகள் புதிய பொருட்களாக உருவாக்கப்பட்டு வருவதாகத் தெரிவித்தார்.

பயன்படுத்தப்பட்ட ஆடைகள் பயன்பாட்டை ஊக்குவிக்கும் வகையில், சிறு விற்பனையகத்தையும் அவர் திறந்து வைத்தார்.

பின்னர் அங்குள்ள தேசிய ஆடை வடிவமைப்புத் தொழில்நுட்ப நிறுவனத்தில் பயின்று வரும் மாணவர்களிடையே அமைச்சர் கலந்துரையாடினார்.

**<<<<>>>>**

மாநிலத்தின் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு தவெக அரசு திட்டங்களை முனைப்புடன் செயல்படுத்தி வருவதாக மாநில வருவாய்த்துறை அமைச்சர் திரு. செங்கோட்டையன் தெரிவித்துள்ளார்.

திருப்பூரில் நடைபெற்ற தவெக அரசின் 100 சாதனைகள் குறித்த விளக்கப் பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய அவர், இப்பகுதி மக்களின்

குடிநீர்ப் பிரச்சினைக்கு விரைவில் நிரந்தரத் தீர்வு காணப்படும் என்று தெரிவித்தார்.

திருப்பூரை தூய்மையான நவீன நகரமாக மாற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று திரு. செங்கோட்டையன் கூறினார்.

இந்தக் கூட்டத்தில் பேசிய மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் அருண்ராஜ், கடந்த காலங்களில் நடைபெற்றதாக கூறப்படும் முறைகேடுகள் தொடர்பான ஆதாரங்கள் சேகரிக்கப்பட்டு அதனடிப்படையில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்தார்.

வரிப் பணத்தை முறைகேடு செய்பவர்கள் மக்கள் மன்றத்தில் பதில் சொல்ல வேண்டும் என்று அவர் கூறினார்.

பெருமளவிலான அன்னியச் செலாவணியை ஈட்டும் வகையில் ஏற்றுமதியில் திருப்பூர் சாதனை படைத்து வருவதாக திரு. அருண்ராஜ் தெரிவித்தார்.

<<<<>>>>

நீட் தேர்வை ரத்து செய்ய வேண்டும் என்பதே காங்கிரஸ் கட்சியின் நிலைப்பாடு என்று மாநில காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. மாணிக்கம் தாகூர் தெரிவித்துள்ளார்.

கோவையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இது தொடர்பாக கடந்த 2019ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டினார்.

அனைத்து நதிகளையும் இணைப்பது என்பது சாத்தியமில்லாத ஒன்று என்றும், தமிழகத்திற்கு கிடைக்க வேண்டிய காவிரி நீரை வழங்குவதற்கான வழிமுறைகளை மத்திய அரசு மேற்கொள்ள வேண்டும் என்று திரு. மாணிக்கம் தாகூர் கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<>>>>

திடக்கழிவு மேலாண்மை விதிமுறைகள் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நீலகிரி மாவட்டம் வெலிங்டன் கண்டோன்மென்ட் வளாகத்தில் நேற்று நடைபெற்றது.

கழிவுகளைத் தரம் பிரித்து பாதுகாப்பான முறையில் கையாளுதல், உரம் தயாரித்தல் போன்ற நடைமுறைகள் குறித்து இந்நிகழ்ச்சியில் விரிவாக எடுத்துரைக்கப்பட்டதாக சுகாதார கண்காணிப்பாளர் திரு. ராதாகிருஷ்ணன் எமது செய்தியாளரிடம் தெரிவிக்கிறார்.

குப்பைகளை தரம் பிரிப்பது குறித்த விளக்க நிகழ்ச்சி மிகவும் பயனுள்ளதாக இருந்தது என்று வெலிங்டனை சேர்ந்த குடியிருப்வாசி திரு. வினோத் தெரிவித்தார்.

<<<<>>>>

தமிழகத்தில், மேற்குத் தொடர்ச்சி மலை மாவட்டங்கள், செங்கல்பட்டு, திருவள்ளூர், காஞ்சிபுரம் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில், ஓரிரு இடங்களில், அடுத்த ஐந்து தினங்களுக்கு மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

உள் மாவட்டங்களில், ஓரிரு இடங்களில் அதிகபட்ச வெப்பநிலை இன்று இயல்பைட் காட்டிலும் இரண்டு முதல் மூன்று டிகிரி செல்சியஸ் வரை உயரக்கூடும் என்று அந்த மையம் கூறியுள்ளது.

சென்னை மற்றும் புறநகர்ப் பகுதிகளில் வானம் இன்று மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், நகரின் ஒருசிலப் பகுதிகளில், லேசான மழை பெய்யக்கூடும் என்று வானிலை மையம் தெரிவித்துள்ளது.

கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை மற்றும் அதன் சுற்று வட்டார பகுதிகளில், நேற்றிரவு பரவலாக இடி மின்னலுடன் கூடிய கனமழை பெய்தது.

இதன் காரணமாக வெப்பம் தணிந்து குளிர்ச்சியான சூழல் நிலவியதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**<<<<>>>>**

***<u>இருவரிச் செய்திகள்</u>***

ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் இன்று அதிகாலை நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிக்டர் அளவில் 5 புள்ளி 9ஆக பதிவானது.

**-------------**

பலோசிஸ்தானில் உள்ள MASTUNG மாவட்டத்தில், குடிமக்கள் மீது பாகிஸ்தான் விமானப்படை நடத்திய டிரோன் தாக்குதலுக்கு பலோச் மனித உரிமைகள் குழு கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

**-------------**

பனாமா நாட்டுக் கொடியுடன், 24 மாலுமிகள் மற்றும் 72 ஆயிரத்து 100 மெட்ரிக் டன் இரும்புத் தாதுவுடன் சென்று கொண்டிருந்த சரக்கு கப்பல், வங்கக்கடலில் மூழ்கியது.

-------------

மாநிலங்களின் எல்லைப் பகுதிகளில் நிகழும் அன்றாடப் பிரச்சினைகளுக்கு விரைந்து தீர்வு காண்பதை உறுதி செய்யும் வகையில், கூட்டுக் குழு அமைப்பது என்று மேகாலயா, அசாம் மாநில அரசுகள் முடிவு செய்துள்ளன.

-------------

387வது மெட்ராஸ் தினத்தை முன்னிட்டு சென்னை கோட்டூர்புரம் அண்ணா நூற்றாண்டு நூலகத்தின் சிறப்பு புகைப்படக் கண்காட்சியை மாநில அமைச்சர்கள் திரு. ராஜ்மோகன், திரு. ரஜேஷ்குமார் ஆகியோர் நேற்று தொடங்கி வைத்தனர்.

-------------

காஞ்சிபுரம் - அரக்கோணம் இடையே உள்ள ரயில்வே கிராசிங்கில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் வகையில் உயர்மட்ட மேம்பாலம் அமைப்பது குறித்து மாநில வனத்துறை அமைச்சர் திரு. ரஞ்சித் குமார் ஆய்வு செய்தார்.

-------------

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின் சார்பில், சென்னை அசோக் நகரில் நேற்று நடைபெற்ற மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமில், மொத்தம் 3 ஆயிரத்து 289 பேர் பயனடைந்தனர்.

-------------

ராணிப்பேட்டை மாவட்டத்தில், மாநிலப் பள்ளிக்கு கல்வித் துறை சார்பில், மாணவ, மாணவிகளுக்கான இளையோர் திறன் கலைத் திருவிழா என்ற மாவட்ட அளவிலான போட்டிகளை ஆட்சியர் திருமதி ப்ரியா ரவிச்சந்திரன் தொடங்கி வைத்தார்.

-------------

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில், கொத்தடிமைத் தொழிலாளர் ஒழிப்பு குறித்த பயிற்சிப் பட்டறை ஆட்சியர் திருமதி பத்மஜா தலைமையில் நடைபெற்றது.

-------------

திருவாரூர் மாவட்டம் வடூவூர் கோதண்டராமர் கோவிலில் பெரிய திருமஞ்சன அபிஷேகம் நேற்று நடைபெற்றது.

-------------

***<u>விளையாட்டுச் செய்திகள்</u>***

இந்தியா - இலங்கை அணிகளுக்கு இடையேயான இரண்டாவது மற்றும் இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டி இன்று தொடங்குகிறது.

கொழும்பில் இப்போட்டி காலை 10 மணிக்குத் தொடங்குகிறது.

------------

சென்னையில் நேற்று நடைபெற்ற தமிழ்நாடு ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில், மதுரை அணி 72 ரன் வித்தியாசத்தில், நெல்லை அணியை வென்றது.

-------------

Cancun சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஸ்ரீராம் பாலாஜி - அனிருத் சந்திரசேகர் இணை இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் இந்த இணை, 3-6, 6-3, 10-3 என்ற செட்கணக்கில், மெக்சிகோவின் Santiago González - தைவானின் Ray Ho இணையை வென்றது.

-----------------

புதுதில்லியில் நடைபெற்ற உலக பேட்மிண்டன் சாம்பியன் போட்டியின் மகளிர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் Treesa Jolly - Gayatri Gopichand இணை வெண்கலப்பதக்கம் வென்றது.